தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 7 திகதி: 12/06/2021

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. ச. பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

**பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக**

தாய்லாந்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டுக்குச் சென்றுவிட்டு என் தந்தை வீடு திரும்பினார். அவர் அங்கிருந்து சில நினைவுப் பொருள்களை வாங்கி வந்திருந்தார். அதில் சிறப்பானது கல்லில் செதுக்கப்பட்டிருந்த ஒரு யானையின் உருவம். அது கரிய நிறத்தில் இருந்தாலும் பளபளப்பாக இருந்தது. அதன் முகம் சாந்தமான தோற்ற முடையதாக இருந்தது. அதனால், அது பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

தாய்லாந்து மக்கள் யானையின் உருவத்தைத்தான் அரச சின்னமாகக் கருதுகின்றனர். அதனால் தான் நான் இதை வாங்கி வந்தேன் என்று தந்தையார் பிள்ளைகளிடம் கூறினார். அதுமட்டுமன்று யானைகளைப்பற்றி மேலும் பல விவரங்களைத் தெரிந்து கொண்டதால் தான் நான் இதை வாங்கி வந்தேன் என்றார் தந்தையார்.

பல நாடுகளில் யானைகளின் தந்தங்களுக்காக அவற்றைக் கொன்று குவிக்கிறார்கள். ஆனால் தாய்லாந்தில் யானைகளை அமைதியின் சின்னமாகவும், வலிமையின் சின்னமாகவும் கருதுகிறார்கள். அதனால், அவற்றைப் பாதுகாக்கிறார்கள்.

அந்த நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் அவற்றுக்குக் கூடாரங்கள் அமைத்திருக்கிறார்கள். அங்கே அவற்றைக் காடுகளிலும், மலைகளிலும் வேலை செய்யப் பழக்குகிறார்கள். அதே நேரத்தில் அந்த யானைப்பாகர்கள் அவற்றுக்குக் காட்டில் வாழ்வதைப் போல் முழுச் சுதந்திரமும் கொடுக்கத் தவறுவதில்லை.

யானைகள் மனிதர்களைப்போல் நட்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் தன்மையுடையன. தம் நண்பர்களை விட்டுப் பிரியாமல் நெருங்கிப் பழகும். மேலும் அவற்றிடம் அமைந்த கம்பீரமான தோற்றம், அடிமேல் அடிவைத்து மிகக் கவனமாக நடக்கும் இயல்பு, அவற்றின் அறிவுக்கூர்மை ஆகிய பண்புகளால் தாய்லாந்து மக்கள் யானைகளை மிகவும் விரும்புகிறார்கள். எதிர்வரும் விடுமுறையின் போது தாய்லாந்துக்கு சென்று எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து மகிழ்வோம் என்றார் தந்தையார்.

**பின்வரும் வினாக்களுக்கு முழு விடை எழுதுக.**

1. கல்லில் செதுக்கப்பட்ட யானை எப்படி இருந்தது என்பதை விபரமாக எழுதுக.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2. தந்தையார் யானைச் சிலையை வாங்கி வந்ததற்கான காரணங்கள் எவை என்று கூறினார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

3. தாய்லாந்தில் ஏன் யானைகள் பாதுகாக்கப்படுகின்றன?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

4. யானைக்கும், மனிதர்களுக்கும் உள்ள ஒற்றுமையான தன்மை பற்றி இங்கு என்ன கூறப்படுகின்றது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

5. தாய்லாந்து மக்கள் யானைகளை விரும்புவதற்கான காரணங்கள் எவை என்று கண்டீர்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

(5x3 = 15 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து (5) சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.**

1. வணக்கம்

______________________________________________

______________________________________________

______________________________________________

2. கதை

______________________________________________

______________________________________________

______________________________________________

3. மிருகங்கள்

______________________________________________

______________________________________________

______________________________________________

4. விளையாட்டுக்கள்

______________________________________________

______________________________________________

______________________________________________

5. குடும்பம்

______________________________________________

______________________________________________

______________________________________________

6. சனிக்கிழமை

______________________________________________

______________________________________________

______________________________________________

7. பிரதான பாடசாலை

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

8. திருக்குறள்

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

9. மின்னஞ்சல்

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

10. பூர்வீகம்

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

(10 x 2 = 20 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**இரு வாக்கியங்களையும் சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.**

1. நான் நூலகத்துக்குச் சென்றேன்.
   நான் அங்கே சில புத்தகங்களை இரவல் வாங்கினேன்.

______________________________________________

______________________________________________

______________________________________________

2. அம்மா கடைக்குச் சென்றார்.
   அம்மா அங்கே வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்தார்.

______________________________________________

______________________________________________

______________________________________________

3. நாம் வீட்டிற்குள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம்.
   அப்போது அயலவர் அழைப்பு மணியை ஒலித்தார்.

______________________________________________

______________________________________________

______________________________________________

4. சூரியன் மாலையில் மறைந்தான்.
   அப்போது வானத்தில் இருள் சூழ்ந்தது.

______________________________________________

______________________________________________

______________________________________________

5. வாணி ஓர் அழகான ஓவியத்தை வாங்கினார்.
   அவர் அதை வீட்டுக் கூடத்தில் தொங்கவிட்டார்.

______________________________________________

______________________________________________

______________________________________________

(5 x 3 = 15 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒவ்வொன்றாக | தாமதமாகவே | உணவாகக் | ஆத்திரம் | இறந்தது |
| கட்டளை | சிங்கம் | சிங்கத்திற்கு | தவணை | கர்ச்சித்தது |

வேட்டையாடச் சென்ற ____________________ சில நாள்களாக மிருகங்கள் ஒன்றும் ____________________ கிடைக்கவில்லை. காட்டுராசா தான்தானே என்று கர்வம் கொண்ட சிங்கம் எல்லா மிருகங்களையும் அழைத்து, 'இன்று முதல் உங்களில் ஒரு மிருகம் தினமும் எனக்கு உணவாக வரவேண்டும். தவறினால் உங்கள் இனத்தையே அழித்து விடுவேன்' எனக் ____________________ இட்டது. பயங்கொண்ட மிருகங்கள் அன்று முதல் ____________________ ஒவ்வொரு நாளும் சிங்கத்திற்கு உணவாகி இறந்தன. வேட்டையாடாமல் விருந்து கிடைப்பதை எண்ணிச் சிங்கம் மகிழ்ச்சியுடன் நாள்களைக் கழித்தது.

முயலின் ____________________ வந்ததும் அது சிங்கத்தை எப்படியும் தந்திரத்தால் வென்றுவிட ஒரு திட்டம் போட்டது. அன்று ____________________ சிங்கத்திடம் சென்றது. கோபம்கொண்ட சிங்கம் 'ஏன் இவ்வளவு தாமதம்' எனக் ____________________. இதற்கு முயல் 'நான் வரும் வழியிலே இன்னுமொரு சிங்கம் என்னைக் கொன்றுவிடத் துரத்தியது. அதனிடமிருந்து தப்பி வரத் தாமதமாகிவிட்டது' எனச் சொன்னது. இதனால் ____________________ அடைந்த சிங்கம் புதிய சிங்கத்தைக் காட்டும்படி கேட்டது. முயல், இராசாச் சிங்கத்தை அழைத்துச் சென்று ஒரு பாழடைந்த கிணற்றைக் காட்டியது. அதனுள் எட்டிப் பார்த்த ____________________ தனது பிம்பம் தண்ணீர்க்குள்ளே தெரிகின்றது என்ற அறிவு கூட இல்லாது அதனைக் கொல்ல எண்ணிக் கிணற்றிற்குள்ளே பாய்ந்து ____________________. அன்றிலிருந்து எல்லா மிருகங்களும் மகிழ்ச்சியாக வாழ்ந்தன. 'மதியால் விதியையும் வெல்லலாம்', 'அறிவு ஆற்றலை வெல்லும்' என்பவை இந்தக் கதையின் உட்கருத்துகள் ஆகும்.

(10 x 2 = 20 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கடிதத்தில் ஒன்றைத் தெரிவுசெய்து 60 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.**

1. உமது பிறந்தநாள் விழாவுக்கு உமது நண்பரைக் கலந்து கொள்ளுமாறு அழைத்து ஒரு மின்னஞ்சல் எழுதுக.
2. உமது பெற்றோர் உமக்கு ஒரு செல்லப்பிராணியை அன்பளிப்பாகத் தந்துள்ளனர். அந்தப் பிராணியைப் பற்றி உமது உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **6** | **புள்ளிகள்** | **20** | **பக்கம்** | **10** |

**பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. நான் படித்த மறக்க முடியாத கதை.
2. எனது பூர்வீகப் பிரதேசமும் அதன் சிறப்புகளும்.
3. கீழே உள்ள படத்தொடரைப் பார்த்து ஒரு கட்டுரை எழுதுக.

   (படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களை கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.)




| | | |
|---|---|---|
| திட்டமிட்டனர் | தத்தளித்தல் | நீச்சல் |
| உதவிக்கு அழைத்தல் | பாடம் படித்தல் | உயிர்க்காப்பாளர் (life guard) |
| அறிவுரை கூறுதல் | காப்பாற்றினார் | ஆழமான பகுதி |
| | ஆழமில்லாத குளம் | |